## நிறைவான இலாபம் தரும் நேரடி விற்பனை…!

10.05.2013





காளான்

சென்னை-புதுச்சேரி கிழக்குக் கடற்கரை சாலையில், வழி நெடுக இருக்கும் அழகழகான பண்ணை வீடுகள், தங்கும் விடுதிகளுக்கு அடுத்தபடியாக அனைவரையும் கவர்வது, ராதாகிருஷ்ணனின் பண்ணை. சென்னையிலிருந்து மரக்காணத்திற்கு ஒன்பது கிலோ மீட்டருக்கு முன் வருகிறது கோட்டைக்காடு எனப்படும் கிராமம். இங்குதான் உள்ளது ராதாகிருஷ்ணனின் பண்ணை. இவரது சொந்த ஊர் கேரள மாநிலம் ஆலப்புழா. காய்கறி வளர்ப்பதில் அதிக ஆர்வம் இருந்ததால் வீட்டு மொட்டை மாடியில் காய்கறி தோட்டம் போட்டுள்ளார். வீட்டிற்குத் தேவையானதைவிட அதிகமாக காய்கறிகள் கிடைக்கிறது. அப்பொழுதுதான் எல்லோருக்கும் இத்தொழில்நுட்பத்தை சொல்லிக் கொடுக்குலாம் என்று வீட்டுத் தோட்டப் பயிற்சியைக் கொடுக்க ஆரம்பித்துள்ளார். பலரும் தொட்டி, விதை, இயற்கை உரம் என்று கேட்க ஆரம்பித்திருக்கிறார்கள். எல்லோருக்கும் வாங்கிக் கொடுக்க ஆரம்பித்திருக்கிறார். இவரிடம் கற்றவர்கள் 100 பேருக்கும் அதிகமாக சென்னை நகரத்தில் மாடியிலேயே காய்கறி உற்பத்தி செய்கிறார்கள்.

**காய்கறி முதல் காளான் வரை**

குறைந்த இடத்தில் தொட்டிகளில் காய்கறிச் செடிகளை வளர்ப்பதை செயல்முறையாக காட்டுவதற்காக 35 உறுப்பினர்களைக் கொண்ட ‘குட் கவர்னன்ஸ் கார்ட்ஸ்’ அமைப்பு மூலமாக இந்த இடத்தை குத்தகைக்குப் பிடித்து பண்ணையை ஆரம்பித்திருக்கிறார். விதை, தொட்டி, உரம், காய்கறிகள், பழங்கள், காளான் என்று எல்லாவற்றையும் விற்பனை செய்கிறார். இவர்களே நேரடியாக விற்பனை செய்வதால் குறைந்த விலைக்கே ஃபார்ம் ஃபிரஷ் காய்களை கொடுக்கிறார்கள். இதில்லாமல் காய்கறிச் செடிகள் வளர்ப்பு, காளான் வளர்ப்பு பயிற்சிகளும் கொடுக்கிறார்கள்.

**காலி பாட்டிலிலும் காய்கறிச் செடி**

3 ஆயிரத்து 200 சதர அடியில் பசுமைக் குடில் அமைத்திருக்கிறார்கள். அதற்குள்தான் தொட்டிகளில் கத்தரி, வெண்டை, மிளகாய், தக்காளி, காலிஃபிளவர், முட்டைகோஸ், பீன்ஸ், அவரை என்று வளர்க்கிறார். உபயோகமில்லாத தண்ணீர் பாட்டில், கிரீஸ் டப்பாக்களிலும் சின்னச் சின்ன செடிகளை வளர்க்கிறார்கள். முருங்கை, வாழை, பப்பாளி மாதிரியான மர வகைகளை பிளாஸ்டிக் ட்ரம்களில் வளர்க்கிறார்கள். பி.வி.சி பைப்புகளை நட்டு வைத்து. அதில் கயறு கட்டி கொடி வகைகளைப் படர விட்டிருக்கிறார்கள். பழைய தண்ணீர் பாட்டிலில் சின்னதாக துளையிட்டு அதில் துணி நாடாவைக் கட்டி தொட்டிக்குள் புதைத்துவிடுகிறார். இந்த நாடா மூலமாக தண்ணீர் கொஞ்சம் கொஞ்சமாக இறங்கிவிடும். பூச்சிகளை விரட்டுவதற்கு வேப்பெண்ணெய் கலந்த பூச்சி விரட்டியைத் தெளிக்கிறார்கள். கீற்றுக் கொட்டகைக்குள் காளாண் வளர்க்கிறார்கள். அதை ஒரு கிலோ 175 ரூபாய் என்று விற்றுவிடுவதாகக் கூறுகிறார் ராதாகிருஷ்ணன்.

காளான், காய்கறி, காளான் உணவுகள் விற்பனை செய்வதன் மூலமாக, தினமும் 5 அயிரம் ரூபாய் அளவுக்கு வருமானம் கிடைக்கிறது. ஆட்கள் சம்பளம் உள்ளிட்ட செலவுகள் போக தினமும் 2 ஆயிரத்து 500 ரூபாய் லாபமாக கிடைக்கிறது. இந்த மொத்தப் பண்ணையும் ஒன்றரை ஏக்கரில் தான் இருக்கிறது. அதிலேயே இந்த அளவிற்கு வருமானம் கிடைக்கிறது. அதற்கு முக்கிய காரணம், நேரடி விற்பனைதான் என்கிறார் ராதா கிருஷ்ணன்.

**தொடர்புக்கு**
ராதா கிருஷ்ணன்
அலைபேசி : 98410 23448